லாலா
சோப்

பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி



பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 23 ரபி அவ் 26 இதழ் 25
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7 3 78


## அருணாசலப் பிரதேசம் ஜனதா ஆட்சி அமைக்கும்

புதுடில்லி, மார்ச் 6

அண்மையில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் அருணாசலப் பிரதேசத்தில் ஜனதா கட்சி ஆட்சி அமைக்கும் வகையில் அறுதிப்பெரும்பான்மைப் பலம் பெற்றுள்ளது.

30 சட்டசபைத் தொகுதிகளை உள்ள யூனியன் பிரதேசத்தில் இன்று இரவுவரை வெளியான 28 முடிவுகளின் படி ஜனதா கட்சி 16 இடங்

(6-ம் பக்கம் பார்க்க)

## கட்சியிலிருந்து நான் விலகமாட்டேன்- 'இராசு'

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரையின் நீண்ட நாள் அரசியல் மௌனத்தைக் கலைத்து கூட்டணி நடவடிக்கைகளில் அவரைத் தீவிரமாகப் பங்குபற்றச் செய்யும் முயற்சியில் இங்கு வந்த நால்வர் குழு, முதல் சுற்றுப் பேச்சுக்களிலேயே நல்ல பலனைக் கண்டுவிட்டது.

'இராசு' விவகாரம் குறித்து அவருடன் நேரடியாகவே பேச்சு நடத்த (திருமலை எம். பி. திரு. சம்பந்தன் தலைமையில் இங்குவந்த சமாதானக் குழுவினருக்கு, நேற்றுக் காலையும், நண்பகலும் 'இராசு' தனது வீட்டில் விருந்தளித்து உபசரித்ததுடன் முதல் சுற்றுப் பேச்சுக்களின்போதே தனது நிலையைத் தெளிவாகக் கூறிவிட்டார்.

''நானும் இயக்கமும் ஒன்று. ஒரு நாளும், இயக்கத்துக்கு விரோதமாக இயங்கமாட்டேன். கட்சியிலிருந்தும் விலகமாட்டேன். அதே நேரத்தில்; இயக்கத்துக்கு விரோதமாக எவரும் என்னைப் பாவிக்க முயற்சித்தால் அதற்கும் இடமளிக்கமாட்டேன்''— இவ்வாறு திரு. செ. இராசதுரை சமாதானக் குழுவினரிடம் நேற்று நம்பிக்கையுடன் கூறினார்.

இச்சமாதானக் குழுவின் தலைவராக திரு. சம்பந்தனும், ஏனைய உறுப்பினர்களாக திருவாளர்கள் வெ. யோகேஸ்வரன், த. இராஜலிங்கம், எஸ். சூசைதாசன் ஆகிய எம். பிக்கள் உள்ளனர். சமரசப் பேச்சுகள் இன்று முடிவடையும். (ம)

### யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களை கொன்றுவிட்டனர் எனக் கூறி

# பழிவாங்க வேண்டும் என்று தேடினார்கள்!

## மனைவியை இழுத்து நிலத்தில் அடித்தனர்!

## பொறியியலாளர் சாட்சியம்

(நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன்)
(யாழ்ப்பாணம்)

**''யாழ்ப்பாணத்தில் சிங்கள சகோதரர்களைக் கொன்றுவிட்டார்கள். அதற்குப்பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டோம்'' என்று கூச்சல் போட்டுக்கொண்டு குண்டர்கள் எங்களைத் தாக்கினர்.**

''என்னையும் எனது மனைவியையும் குண்டர்கள் தேடினார்கள் நாங்கள் குளியலறையில் ஒழித்திருந்தோம் முன் கதவை உடைத்தார்கள் எங்களைத் தேடினார்கள் கடைசியில், குளியலறையையும் உடைத்து எங்களை வெளியே இழுத்து, அடித்தார்கள் குண்டன் ஒருவன் எனது மனைவியை கதறக்கதற இழுத்துச்சென்று நிலத்தில் தலைகுப்புற மோதவிட்டான்! பலத்த காயமடைந்த மனைவி பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார் எங்களைத் தாக்கியவர்களில் ஒருவர் பெயர் வில்லியம். இவர்தான் தொழிற்சங்கத் தலைவர்''

இவ்வாறு மகாஇலுப்பைக் குளத்தைச் சேர்ந்த பொறியியலாளர் திரு. வேதநாயகம் ரகுநாதன் சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

### முதலில் மது; பின்னர் பணம்!

'77ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கந்தோரிலும் வெளியிலும் கடமையாற்றினேன். அன்று கந்தோக்குச் சென்று 'பைல்'களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது உதவியாளர் ஜெயசூரியா வந்து இனக் கலவரம் ஆரம்பித்துவிட்டதாகவும் வீட்டிற்குப் போகுமாறும் ஆலோசனை கூறினார். நான் உடனே 'பாம்' விடுதிக்குச் சென்றேன். என் மனைவி வீட்டிலிருந்தார். அவர் அன்று வேலைக்குப் போகவில்லை. மனைவி விவசாய இலாகாவில் கடமையாற்றினார்.

''ஜெயசூரியா என்னைப் புறப்படத் தயாராகும்படி கூறினார். நான் தயாராகிக்கொண்டிருந்தபோது ஒரு கூட்டத்தினர் வந்தார். அவர்களில் ஒருவரை அடையாளம் காணமுடியும். அவர் பாம் வாசலில் கடமையாற்றும் தற்காலிகக் காவலாளி பிரேமரத்ன அவர்கள் வந்து என்னிடம் குடிப்பதற்கு மதுபானம் கேட்டார்கள். நான் இல்லையென்றதும் மதுபானம் வாங்கப் பணம் கேட்டனர். நான் 50 ரூபா கொடுத்தேன். பின்னர் பணம் கொடுத்ததும் என்னைத் தாக்குதலிலிருந்து காப்பாற்றினார்கள். அக்கூட்டத்தினர் பின் சென்றுவிட்டனர்.

### குண்டர்களில் ஒருவர் தொழிற்சங்கத் தலைவர்!

கமிஷனர்: அதிகாரிகளைப் பாதுகாத்தனர்?- ஆம். பின் ஜெயசூரியா வந்து புறப்படும்படி கூறினார் அப்போது தர்மதாஸாவும் வந்தார். நாங்கள் விடுதியிலிருந்து புறப்பட்டபோது 'ஹோ.. ஹோ...' என்ற கூச்சல் தூரத்தில் கேட்டது சுமார் 80 பேர் விடுதியை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் எம் சிங்களச் சகோதரர்களைக் கொன்றுவிட்டார்கள். பழிவாங்காமல் விடமாட்டோம் எனக் கூச்சல்போட்டுக்கொண்டு வந்தனர். அப்போது தர்மதாசாவும் ஜெயசூரியாவும் நின்றனர்.

பாமுக்குள் வெளியார் வரவேண்டுமானால் அனுமதி பெற்றேவரவேண்டும். ஆனால் இவர்கள் விருப்பம்போல் வந்துகொண்டிருந்தனர்.

நாங்கள் வீட்டைப் பூட்டி

(6-ம் பக்கம் பார்க்க)

## 'குண்டர்கள் தாக்கி சிறுவன் பலியானான்!''

### முருங்கன் கணபதிப்பிள்ளை சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

''பரம்பரை பரம்பரையாக அனுராதபுரத்தில் பிறந்து, வளர்ந்த எங்களை வெளியிலிருந்து வந்த குண்டர்கள் தாக்கி தொல்லை கொடுத்து வதைத்ததினால் ஒரு சிறுவன் பலியாகினான்''

முருங்கனைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:

''நான் அனுராதபுரம் பெரிய கோவிலில் வாழ்ந்து வந்தேன்.

(6 ம் பக்கம் பார்க்க)

### 'மகளையும் என்னையும் வெளியே இழுத்தபின்

## வீட்டுக்குப் பொலிஸார் தீ வைத்தார்கள்'

### கிளிநொச்சி சம்பவம்பற்றி ஒருபெண்

(யாழ்ப்பாணம்)

**''கிளிநொச்சியிலுள்ள எனது வீட்டில் நானும் மகளும் தனியாக இருந்தோம் அப்போதுபொலிசார் வந்து எங்களை வெளியே இழுத்துவிட்டு, வீட்டுக்கு நெருப்புவைத்தார்கள். பொலிஸ்காரர் சிவரத்தினம் எங்களை ஜீப்பில் ஏற்றி பொலிஸ்நிலையத்திற்கு கொண்டுசென்று அடைத்துவைத்தார்''**

கிளிநொச்சியை சேர்ந்த மூத்து சின்னம்மா நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். மூத்து சின்னம்மா மேலும் கூறியதாவது!

'நாங்கள் கண்டி வீதியில், லக்சபான கட்டிடத்திற்கு பின்னால் இருக்கின்றோம் ஆகஸ்ட் 21ம் திகதி என் கணவர் வீட்டில் இல்லை. நானும் மகளும் இருந்தோம்.

வீட்டில் யார் இருக்கிறது என்று பொலிஸார் வந்து கேட்டார்கள், அவர்கள் யூனிபோம் அணிந்திருந்தனர். துவக்கும் வைத்திருந்தனர்.

### வீட்டுக்கு தீ வைத்தனர்

நானும் மகளும் இருப்பதாகச் சொன்னோம். எங்களை

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கண்டிக்குளி, ஈச்சமோட்டை ரோட்டில் 4லாச்சம் 54 குளி உள்ள கப்பித்தான் வளவு என்னும் குடியிருப்பு நிலம் விற்பனைக்குண்டு தரகர்கள் இல்லை விபரங்களுக்கு திருமதி எம்.எப் ஐ. தேவநாதன், 20 டேவிட்ரோட், யாழ்ப்பாணம். 8687

நல்ல பாவனையிலுள்ள 4 சிறி 4000 தொடர் இலக்கம் உள்ள ஹோல்டன் ஸ்பெஷல் கார் விற்பனைக்கு உண்டு மேலதிக விபரங்கட்கு 'ஜோர்ஜ் அராச்' முதலாளியை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், சந்திக்கவும். 8698

B. S. A [Bantam] மோட்டார் சயிக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு N N சண்முகநாதன், காஸ்கதீஜபீச், சிவன் கோவில் ரோட், காரைநகர் 8695

### இனாம்

திருக்கேதீஸ்வர வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர வியாபாரநிலையத்தில் அண்ணா கோப்பி சோயாரின், அண்ணாபற்பொடி ஆகியவற்றை வாங்குபவர்களுக்கு "பாக்" ஒன்று இனாமாக கொடுக்கப்படும். 8685

# திருக்கேதீஸ்வரம் செல்ல பஸ்-ரயில்-படகு சேவை

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் செல்லும் யாத்திரிகர்களின் வசதிக்காக இன்று யாழ் இ போ ச டிப்போ விசேட பஸ் சேவைகளை மேற்கொள்ளுகின்றது.

இன்று காலை 6-30, 8-30, 10 00 பகல் 12-30 1 30 3 00 மணிக்கு வவுனியா ஊடாக திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பஸ்கள் சேவைக்கு விடப்படும்.

அத்துடன் கேரதீவு சங்குப்பிட்டி ஊடாகச் செல்லும் யாத்திரிகர்களின் வசதிக்காக அரைமணித்தியாலத்துக்கு ஒரு தடவை பஸ்கள் சேவையில் ஈடுபடும் என்றும் அவசியம் ஏற்படும் பட்சத்தில் மேலும் அதிக பஸ்கள் சேவைக்கு அமர்த்தப்படும் என்றும் பஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ரயில் சேவை

திருக்கேதீஸ்வரத்துக்கு ரயில் மூலம் செல்லும் பிரயாணிகளின் வசதி கருதி வழமையான பன்னூர் ரயிலுடன் மதவாச்சியிலிருந்து விசேட ரயில் ஒன்று திருக்கேதீஸ்வரம் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இன்று காலை 10-30 மணிக்கு மதவாச்சியிலிருந்து புறப்படும் இந்த விசேட ரயில், பகல் 12 மணிக்கு திருக்கேதீஸ்வரம் சென்றடையும்.

நாளை பகல் 1 15 மணிக்கு திருக்கேதீஸ்வரத்திலிருந்து புறப்படும் இந்த விசேட ரயில் மாலை 3-03க்கு மதவாச்சிக்கு வரும்.

## படகுச்சேவை

இதே வேளையில் திருக்கேதீஸ்வர யாத்திரிகர் நலன்கருதி கேரதீவு-சங்குப்பிட்டி படகுச் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

இதனை விசேட சேவையாகச் செய்வதற்குரிய ஏற்பாடுகளை பூநகரி ப.நோ கூ. சங்கம் மேற்கொள்வதாக அதன் தலைவர் திரு கா. கார்த்திகேசு தெரிவித்தார் ——

## உரியவர் யார்?

யாழ். நிம்மரி மண்டபத்திற்கு முன்பாக கிடக்கக் காணப்பட்ட ஆண்கள் மூக்குக் கண்ணாடி ஒன்று திரு. பூ குலேந்திரலிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்

# வட இலங்கை சங்கீதசபை பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. இப் பெறுபேறுகள் ஈழநாடு இதழில் தொடர்ந்து வெளிவரும்

### முதலாம் பகுதி யாழ்ப்பாணம் முதலாம் பிரிவு

புவனி செல்வராசா பாட்டு. நந்தகுமார் ஞானரஞ்சன் வீணை பாலாம்பிகை திருநாவுக்கரசு பாட்டு. மதிவதனா மதுரைலிங்கம் புல்லாங்குழல். குமுதினி சண்முகம் பாட்டு, கிருஷ்ணராகினி காசிப்பிள்ளை பாட்டு. ரஜீவ் பாஸ்கரசிங்கம் பாட்டு கிருஷ்ணபதி காசிப்பிள்ளை பாட்டு. திலகசக்தி முத்துக்குமாரசாமி பாட்டு. தாரணி ஜெயரத்தினம் பாட்டு. ராஜூலன் தவராசலிங்கம் பாட்டு. சுஜனி துரைசிங்கம் பாட்டு சுமதி தனபாலசிங்கம் பாட்டு. நிர்மலன் மகேசன் புல்லாங்குழல், விஸ்டா அருளம்பலம் பாட்டு உதயந்தி வாமதேவன் வீணை. கௌரி மனோகரி இரத்தினம் பாட்டு. சுதாகர் குமாரசாமி புல்லாங்குழல், ரஞ்சன் ஞானசுந்தரம் வயலின். மேகலாதேவி குரு

[5-ம் பக்கம் பார்க்க]

### தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலைக்கு 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேலைபழகுவதற்குவேண்டும். வேலைபழகும் பொழுது ரூபா 4/- சம்பளம் கொடுக்கப்படும்

உடனடியாக நேரில் வரவும்!

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

8696

### தேவை

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் குறைந்தது 2 அறைகளும் பெரிய விறாந்தை அல்லது மண்டபம் உள்ள வீடு நல்லநீர் வசதியும் போக்குவரத்து வசதியும் உள்ளதாய் சோப் தயாரிப்பதற்கு வாடகைக்கு வேண்டும். வீடு நல்ல முறையில் பாவிக்கப்பட்டு பழுதுகள் ஏற்படின் திருத்திக்கொடுக்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும்.

பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை

8697 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

### இலங்கை இளங்கலைஞர் மன்றம்

நடாத்தும்

12 தங்கப் பதக்கங்களுக்கான

## வருடாந்த இசைப்போட்டி 1978

ஃ வாய்ப்பாட்டு ஃ வயலின்

ஃ மிருதங்கம் ஃ வீணை

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

விண்ணப்ப முடிவு திகதி 20-3-78

விபரங்களுக்கு:

செயலாளர்,

இளங்கலைஞர் மன்றம்,

171/10, கோவில் வீதி — யாழ்ப்பாணம். 8677

### கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

1. ஆறுமுகம் பொன்னுத்துரையும் பெண்
2. தங்கரத்தினமும் இருவரும், மயிலிட்டிக்கரை.

—வழக்காளி

இல: ஈடு/74

எதிராக

ஐயன் இன்னவன், மயிலிட்டி வடக்கு.

—எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/74ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் திகதி 15 3 1978) புதன்கிழமை முற்பகல் 0 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 537/33ம் 6-6 1974 தொடக்கம் 6-12-1974 வரைக்கும் ரூபா 400/=க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை.

### ஆதனவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டி கோவிற்பற்று "முலவை இறை" பள்ளக்காடு நிலப்பரப்பு இரண்டு (2) குளி ஒன்பதும் (9) இதில் கிழக்குப் பக்கமாகப் பிரிவிடப்பட்ட நிலப்பரப்பு ஒன்று (1) குளி (4½ நாலரையும் மூன்று பனைகளும் எல்லை கிழக்கு வன்னிதம்பியின் மகளுக்குரிய வாதனம் வடக்கு சங்கரப்பிள்ளை முருகுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரியவாதனம். மேற்கு மாதன் வேலாறசுவுக்குரியவாதனம். தெற்கு வேலும் பிள்ளை பொன்னுத்துரைக்கும் மறுபேருக்குமுரியவாதனம் இதடங்கலும்.


க. சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும் மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை:
11-02-1978. 8693


இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் ஷவரங்கள் எடுப்பதற்கு

கிளாசிக் பிளேட்

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்:
உறவுஸ் அண்ட் புறொபர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

RAVI

ஈழநாடு
The Eelanadu

# சஞ்சிகைகள் இறக்குமதி

தரமற்ற தமிழ்ச் சஞ்சிகைகளும் நூல்களும் பெருமளவில் நமது நாட்டில் சமீப நாட்களாக வந்து குவிந்து கொண்டிருப்பதைத் தடுப்பதற்கு ஆவன செய்வதாக வட்டுக்கோட்டைத் தொகுதி உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு தா. திருநாவுக்கரசு யாழ் இலக்கிய வட்டம் தனது பணிமனையில் நடத்திய கூட்டத்தில் உறுதியளித்திருக்கிறார்.

இவ்வைபவத்துக்குத் தலைமைதாங்கிய இலக்கிய வட்டத் தலைவர் கவிஞர் கந்தவனம் சமீப நாட்களாக தரமற்ற சஞ்சிகைகளும் நூல்களும் கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்யப்படுவதாகவும் இதனால் இந்நாட்டுத் தமிழ் மக்களின் கலாசாரத்துக்கும் மரபுக்கும் ஆபத்து ஏற்படலாமென்றும் வெறும் வியாபார நோக்கத்துடன் இவை இங்கு வந்து குவிவது இலக்கிய வளர்ச்சியையே பாதிக்குமென்றும் கவலை தெரிவித்து இதைத் தடுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்.

தரமான பத்திரிகைகள், சஞ்சிகைகள் இறக்குமதி செய்யப்படுவதையோ அறிவு நூல்கள் இங்கு வருவதையோ யாரும் ஆட்சேபிக்கவில்லையென்றும் கவிஞர் கந்தவனம் தெளிவாகக் கூறியிருந்தார்.

முன்னைய அரசாங்கம் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்களுக்குக் கட்டுப்பாடுவிதித்தபோது தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்குமுள்ள கலாசாரத் தொடர்பைத் துண்டிக்கும் செயல் என்று குரல் எழுப்பப்பட்டது.

ஆனாலும் சஞ்சிகைகள் நூல்களின் இறக்குமதிக்கு முற்றாகத் தடைவிதிக்கப்படாததால் தரமுள்ள சஞ்சிகைகளையும் நூல்களையும் இறக்குமதிசெய்யும் வாய்ப்பு இருந்தது.

இந்தக் கட்டுப்பாட்டினால் ஈழத்து எழுத்தாளர் பலரின் இலக்கியப் படைப்புகள் நூலுருவில் வெளிவரவாய்ப்பேற்பட்டது. புதிய சஞ்சிகைகளும் இங்கு வெளிவந்தன. ஈழத்து எழுத்தாளரின் நூல்களையும் படைப்புகளையும் மக்களும் படித்தறிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது. பல பல வெளியீட்டு நிறுவனங்களும் உதயமாகின.

இப்போது வந்து குவியும் சஞ்சிகைகள் நூல்கள் பலவற்றைப் பார்த்து இலக்கியப் படைப்பாளிகள் மட்டுமல்ல கற்றறிந்தோர் பலரும் கவலைப்படுவதற்கு நியாயமிருக்கிறது.

தரமான சஞ்சிகைகள் நூல்கள் என்று யார் சொல்வது என்ற கேள்வியும் எழுப்பப்படலாம்.

தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள் ஆகியோரைக்கொண்ட ஒரு குழுவை நியமித்து சஞ்சிகைகள் நூல்களின் தரத்தை நிர்ணயித்துக்கொள்வது கஷ்டமல்ல.

அறிவு நூல்களும் தரமான சஞ்சிகைகளும் இறக்குமதியாவதைக் கட்டுப்படுத்தாத முறையில் இந்த இறக்குமதி இருக்க வேண்டும்.

இதுபற்றி சமயாமூக நிறுவனங்களும் சிந்திப்பது அவசியமாகும்.

# "தரக்குறைவான சஞ்சிகை இறக்குமதியை தடுப்பேன்"

## யாழ். இலக்கியவட்டத்துக்கு வட்டு எம். பி. உறுதி

(யாழ்ப்பாணம்)

தரக்குறைவான சஞ்சிகைகள், நூல்கள் இறக்குமதியாவதைத் தடுப்பதற்கு தமிழர்விடுதலைக் கூட்டணியின் இதர எம். பி.க்களுடன் சேர்ந்து கல்வியமைச்சருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு யாழ். இலக்கிய வட்டத்தினருக்கு உறுதியளித்தார்.

யாழ். இலக்கிய வட்டத்தை ஆரம்பித்த அமரர் இரசிகமணி கனக செந்திநாதனின் உருவப் படத் திரைநீக்கமும் இரசிகமணி எழுதிய 'இரண்டு பூக்கள்'' என்ற நூலின் வெளியீட்டு வைபவமும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ் இலக்கிய வட்டப் பணிமனையில் ஞாயிறுமாலை நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிகள் இலக்கிய வட்டத் தலைவர் கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். இலக்கியவட்டத்தின் பணிகள்பற்றியும் இரசிகமணி அதை உருவாக்குவதற்கு எடுத்த முயற்சிகளையும் விரிவாக எடுத்துரைத்த தலைவர் கந்தவனம் தமிழ்ச்சஞ்சிகைகளும் சமீபநாட்களில் பெருமளவில் வந்து குவிவதைப்பற்றியும் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

''அறிவுநூல்கள் எவ்வளவும் இறக்குமதி செய்யப்படலாம். அதைநாம் ஆட்சேபிக்கவில்லை. தரக்குறைவான இளம் உள்ளங்களில் நெகிழ்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய சஞ்சிகைகள் இப்பொழுது பெருமளவில் வந்து குவிகின்றன. இதனால் நமது நாட்டின் கலாச்சாரம், பண்பாடு பாழாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது மட்டுமல்ல, நமது நாட்டு எழுத்தாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள்'' என்று திரு கந்தவனம் கூறினார்.

தரக்குறைவான நூல்கள், சஞ்சிகைகள் இறக்குமதிசெய்யப்படுவதைத் தடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வட்டுக்கோட்டை எம். பி.க்கு வேண்டுகோளும் விடுத்தார்.

''இரண்டு பூக்கள்'' என்ற நூலின் முதற்பிரதியை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியிடமிருந்து பெற்றுக்கொண்ட வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தமக்கும் இரசிகமணிக்கும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த நட்புறவை நினைவூட்டினார்.

தரக்குறைவான சஞ்சிகைகள், நூல்கள் இறக்குமதியாவது பற்றித் தலைவர் கந்தவனம் குறிப்பிட்டதை திரு திருநாவுக்கரசு குறிப்பிட்டு தரக்குறைவான சஞ்சிகைகள், நூல்கள் எந்த மொழியில் வந்தாலும் அதைத் தடுக்கவேண்டும். இந்தச் சஞ்சிகைகள், நூல்கள் இறக்குமதியைத் தடுக்கும் பொருட்டு தமிழர் கூட்டணி எம். பி.க்களுடன் சேர்ந்து கல்வியமைச்சருடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

"இரண்டு பூக்கள்" நூலை வெளியிட்டு வைத்து சிவத்தமிழச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரைநிகழ்த்துகையில் இரசிகமணி இலக்கியத்தில் மட்டுமல்ல, சமயத்திலும் கொண்டிருந்த ஈடுபாட்டையும் எடுத்துக் கூறினார்.

ஆய்வுரை நிகழ்த்திய திரு நா. சுப்பிரமணிய ஐயர் இரசிகமணியின் பழமையைப்பேணி அந்த சமயம் புதுமையை வரவேற்கும் பண்பைஎடுத்துக்கூறினார்.

இரசிகமணியின் உருவப் படத்தை இலக்கியவட்டப் பணிமனையில் திரை நீக்கம் செய்துவைத்ததைப் பாராட்டிய திரு சுப்பிரமணியஐயர் இதேபோல் இலக்கிய வட்டத்துடன் தொடர்பு கொண்டிருந்த அமரர் 'மதுரகவி' இ. நாகராஜன், மகாகவி உருத்திரமூர்த்தி ஆகியோரின் உருவப் படங்களையும் பணிமனையில் திரைநீக்கம் செய்துவைக்கப் படவேண்டுமென்று யோசனை கூறினார்.

இரசிகமணியின் உருவப் படத்தை திரு. எம். கோபாலரத்தினம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை வரவேற்புரையும், கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி நன்றியுரையும் நிகழ்த்தினர். எழுத்தாளர்கள், விரிவுரையாளர்கள், பேச்சாளர்கள், கவிஞர்கள் எனப்பலர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# மத்திய கிழக்கு அமைதிப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவும்

## சதாத்திடம் பெகின் கோரிக்கை

ஜெய்ரோ, மார்ச் 6

எகிப்து-இஸ்ரேலிய மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின், எகிப்திய அதிபரைக் கோரியுள்ளார்.

எகிப்திய அதிபருக்கு திரு பெகின் எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

எகிப்திய அதிபரின் கடிதத்துக்கு எழுதிய பதில் கடிதத்தில் திரு பெகின் விடுத்திருந்த கோரிக்கையை ஜனப் சதாத் எகிப்திய ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு நேற்றுவாசித்துக் காட்டினார்.

### பெகினின் செய்தியுடன் எகிப்துவரும் அமெரிக்க தூதுவர்

இதேவேளையில அமெரிக்காவின் விசேட தூதுவர் திரு. அதேட்டன் திரு. பெகினின் செய்தியுடன் இன்று எகிப்துக்கு வந்து அந்த விசேட செய்தியை எகிப்திய அதிபரிடம் கையளிப்பாரெனவாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

### தெல்லிப்பழையில் கொடித்தின சிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் தலைவர் திரு. சி. சிவமகராசாவின் தலைமையில் கைதடி இலங்கை சைவ அநாதை இல்லத்தின் கொடித்தினச் சிறப்புவிழா சங்க மேல்மாடியில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் பல பெரியார்கள் கலந்து சிறப்புரையாற்றுவர். இதற்கான ஏற்பாடுகளைப் பொது முகாமையாளர் திரு நவரத்தினம் செய்துள்ளார்.

திருநெல்வேலியில் திரு. து. ஜெயக்குமார் தலைமையில் விழா திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் நடைபெறும்.

### பூட்டோ மீதான

# கொலைக்குற்ற விசாரணை திருப்திகரமாக இல்லை

## பிரி. நிறுவனங்கள் குற்றச்சாட்டு

லண்டன், மார்ச் 6

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜனப் சுல்பிகார் அலி பூட்டோ மீது சுமத்தப்பட்டுள்ள கொலைக்குற்றச்சாட்டு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணைகள் திருப்தி அளிக்கக்கூடியவிதத்தில் நடைபெறவில்லை என்று பிரிட்டனில் உள்ள பாகிஸ்தான் நிறுவனங்கள் பாகிஸ்தான் பிரதமநீதியரசருக்குப் புகார் செய்துள்ளன.

ஜனப் பூட்டோ மீதான இக்கொலைக்குற்ற வழக்கை திருப்திகரமாக விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இந்த நிறுவனங்கள் நீதியரசரைக் கேட்டுள்ளன.

பிரிட்டனிலுள்ள 120 பாக் நிறுவனங்கள் இணைந்து இத்தந்தியை பிரதம நீதியரசருக்கு அனுப்பிவைத்துள்ளன. [இ]

### இடமாற்றம்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் தபாற்கந்தோர் அதிபராகக் கடமையாற்றிய திரு. க. தியாகராசா கொழும்பு பெரிய தபாற்கந்தோருக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். இவரின் இடத்திற்கு மூளாய்த் தீவுதபாற்கந்தோர் அதிபராகக் கடமையாற்றிய திரு. பொ. கணபதிப்பிள்ளை மாற்றலாகி வந்துள்ளார். (அ)

### நூதனசாலையில் திருட்டு

(தருமபுரி)

திருமலை நூதனசாலையில் இருந்த புதைபொருட்கள் திருடப்பட்டுள்ளனவாம்.

இத்திருட்டுத் தொடர்பாகவும் 12,300 ரொக்கப்பண மோசடி சம்பந்தமாகவும் மேற்படி நூதனசாலை ஊழியர் ஒருவரை பொலிசார் சந்தேகத்தின் பேரில் தேடிவருகின்றனர். (உ)

# ரூ. 10 லட்சம் செலவில் வழுக்கையாறு திட்டம்

## அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாம்


[பண்டத்தரிப்பு]

''10 லட்சம் ரூபா செலவில் வழுக்கை ஆறு அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். நானும் மானிப்பாய்த் தொகுதி எம். பியும் சேர்ந்து எங்கள் இரு தொகுதிகளுக்கும் பேலதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியிலிருந்து இத்திட்டத்தை தயாரித்துள்ளோம். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் வழுக்கையாறு செல்லும் கிராமங்களின் விவசாய அபிவிருத்திக்கு பெரும் உதவியாக இருப்பதுடன் இப்பகுதியிலுள்ள கிணறுகளில் நல்ல நீர் ஊற்று ஏற்படவும் வழி செய்யும்''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை தொகுதி எம்பியுமான திரு அ. அமிர்தலிங்கம் அளவெட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அளித்த தேநீர் விருந்து வைபவத்தில் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு எஸ். சுப்பிரமணியம் தலைமையில் அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அளவெட்டி கிராமத்தின் மின்சார அபிவிருத்தி, வீதிகள் திருத்தம், வைத்தியசாலை அபிவிருத்தி, வெள்ளத்தடுப்பு போன்ற முக்கிய விடயங்கள் பற்றிய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் பண்டிதர் பே. நாகலிங்கம், சொர்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வி. பேகன் வைபவப் பிரியோர் உட்படப் பலர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (இ)



நோயுற்ற உடலைத்தாங்கிக்கொள்ளலாம், ஆனால் நோயுற்ற மனதைத் தாங்கமுடியாது.
—கார்திமகான்

றியோ
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று நள்ளிரவுக் காட்சி உண்டு
ஏ. வி. எம் ராஜன் காஞ்சனா நடித்த
வீர அபிமன்யு

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6 30, 9-45.
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - விஜயா
நெஞ்சிருக்கும் வரை

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
ஜெய்சங்கர் நடித்த
துணிவே துணை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவகுமார் — ஜெயசுதா
பட்டிக்காட்டுராஜா

இன்று மகாசிவராத்திரி விசேட நள்ளிரவுக் காட்சி நள்ளிரவு 1-00 மணிக்கு ஆரம்பமாகும்.
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கமல்....ஸ்ரீவித்யா....மேஜர்.... ரஜனிகாந்த்.... நாகேஷ்
அபூர்வ டைரக்டர் கே. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள்
(புதிய பிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ராதா நடித்த
சித்தி

Regal Jaffna Daily 4-45 7-00 & 9-30 p.m. only
Mark Forrest
in
"MACISTE IN THE VALLEY OF THE KINGS"
(Scope-Color-action)

கடைசி வாரம்
வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ° ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாதன் ஸ்ரீதேவி-ஒய்.விஜயா
மூன்று முடிச்சு
திரைக்கதை வசனம், டைரக்‌ஷன்; கே. பாலசந்தர்
10-3-78 முதல்
ரவிச்சந்திரன் - விஜயகுமாரி - கே. ஆர். விஜயா
ஜானகி சபதம்

ராணி [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா நடித்த
பணக்கார பெண்

மகா சிவராத்திரியை முன்னிட்டு இரவு 2-30 மணிக்கு நள்ளிரவுக் காட்சியும் காண்பிக்கப்படும்.
ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார் நடித்த
மேயர் மீனாட்சி

வெலிங்டன்
எஸ் எஸ் ஆர் - பத்மினி
காட்டு ரோஜா

லிடோ (யாழ் நகர்) போன் 7693
முத்துராமன் மேஜர் சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்


# தமிழ் ஈழ இலட்சியத்தை கூட்டணி மறந்துவிட்டது

## குமார் பொன்னம்பலம் கவலை

(யாழ்ப்பாணம்)

"நான் தமிழ் இளைஞர்களுக்குத்தான் வேலைபெற்றுக் கொடுத்தேன். சிங்கள இளைஞர்களுக்கல்ல. சிலரின் நடவடிக்கையால் 185 ஏழை இளைஞர்கள், வேலையிழந்து தவிக்கின்றார்கள்."

ஆவரங்கால் சிவன் கோவில் வீதியில் நடந்த தமிழ் காங்கிரஸ் கருத்தரங்கில் பேசிய தமிழ்க் காங்கிரஸ் உப-செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் இவ்வாறு கூறினார். திரு. பி தங்கராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது

கூட்டணியினர் இன்று தமிழ் ஈழத்தை மறந்துவிட்டனர் இளைஞர்களை வேலை நீக்கம் செய்வதும், வேலைபெற்றுக் கொடுப்பதுமே அவர்கள் வேலையாகிவிட்டது

தேர்தல் காலத்தில் வேலை வேண்டுமானால் மற்றவர்களுக்கு வாக்களியுங்கள், தமிழன் தன்மானம் காப்பாற்ற தனிநாடு பெறவேண்டுமானால் எங்களுக்கு வாக்களியுங்கள் என்றனர் இன்று கூட்டணியினர் தமிழ் ஈழத்தை மறந்து வேலைபெறுவதில்தான் கவனம் செலுத்துகிறார்கள்

ஜனாதிபதி வைபவத்தை பகிஷ்கரித்தவர்கள், இன்று விருந்துக்கு போகிறார்கள். 66ம் ஆண்டு நியாயமான உரிமை வழங்கப்பட்டபோது மசால்வடை என்று கேலிசெய்த இடதுசாரி தலைவர்களுடனும் விருந்துண்ணுகிறார்கள். கூட்டணியினரின் போக்கு தமிழ் மக்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது.

காங்கிரஸ் வாலிப முன்னணி செயலாளர் திரு ஆனந்தராசா திரு த. மகேந்திரராஜா ஆகியோரும் பேசினார்கள். (ஈ-நி)

# இன்று சிவராத்திரி விழா

[யாழ்ப்பாணம்]

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மகா சிவராத்திரி விழா இன்று சிறப்பாக நடைபெற உள்ளது. மாலை 6 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகளும் மறுநாள் அதிகாலை சமுத்திர தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

இரவு விசேட நிகழ்ச்சிகளாக இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக பேராசிரியர் கா. குலேந்திரன், ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலய அதிபர் சைவப்புலவர் நா விசுவலிங்கம் ஆகியோரின் விசேட சொற்பொழிவுகள் பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்களின் வேத பாராயணம், செல்வி சின்னத்துரை மங்கையர்க்கரசி குழுவினரின் பக்திப் பாடல்கள் சங்கீத பூஷணம் செல்வி இரகுபிள்ளை சுந்தரேஸ்வரியின் வீணை இசை, இணுவையூர் என் ஆர். கோவிந்தசாமி குழுவினரின் நாதசுர இசை முதலானவை இடம்பெற உள்ளன.

## நாவலப்பிட்டியில்

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான சிவராத்திரி விழாவில் கலை நிகழ்ச்சிகளும், சமயச் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

## யூனியன் கல்லூரி

[யாழ்ப்பாணம்]

மகா சிவராத்திரியை ஒட்டி தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் விசேட வழிபாடும் திருமுறை ஓதலுடன் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பண்டிதர் இ நமசிவாய தேசிகர் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

## மானிப்பாயில்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் இந்துக் கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெறும் சிவராத்திரிவிழாவை இலங்கை தெய்வீக ஒளிச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

சமய சொற்பொழிவுகளும் பக்திப்பாடல்களும் இடம் பெறும்.

## காரைநகரில்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் பத்தர் கேணி வன்மீக விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது இவ்விழாவில் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம் நாடகங்கள் என்பன இடம் பெறுகின்றன.

## கொழும்புத்துறை

(வண்ணார்பண்ணை)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை பிள்ளையார் கோவிலில் விஷேச பூசைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

விஷேச கலை நிகழ்ச்சிகளில் ஏ ஆர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி குழுவினரின் பக்திப்பாடல் நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## மகாஜனாவில்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சிவராத்திரி விழா சிவகாமி சமேத ஆனந்த நடராசர் ஆலயத்தில் கல்லூரி அதிபர் திரு பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறுகிறது

விசேட பூசையும் கல்லூரி மாணவர்களின் தேவாரம், பேச்சு, பண்ணிசை ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## நாயன்மார்கட்டில்

[யாழ்ப்பாணம்]

நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா நான்கு சாம விசேட பூசைகளுடன் நடைபெறும்.

வேதபூஷணம் க. சாம்பசிவக்குருக்கள், உரையாசிரியர் வை நல்லையா, வித்துவான் க சொக்கலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக் கழகத்தினரின் தமிழ் மறை ஓதலும் இடம்பெறும்.

## ச. ச. நிலயத்தில்

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சனசமூக நிலயத்தில் சிவராத்திரி விழா நான்குசாம விசேட பூசைகளுடன் நடைபெறும். இதன் பின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## சித்தன்கேணியில்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி விழாவை ஒட்டி விசேட அர்த்த ஜாமப்பூசை ஆராதனைகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுகிறது

## நீர்வேலியில்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் மகா சிவராத்திரி விழா இன்று கொண்டாடப்படுகிறது பிரம்மஸ்ரீ சி வை நித்தியானந்த பாகவதரின் சங்கீத கதாப்பிரசங்கமுட்பட பல சிறப்பு நிகழ்ச்சிகள் இவ்விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (கி)

# இலங்கைக்கு அமெரிக்கா ரூ. 25 கோடி கடன் உதவி

(கொழும்பு)

மலேரியா நோய்க் கட்டுப்பாடு விவசாய வரைபடத் தயாரிப்பு ஆகிய துறைகளில் பயன்படுத்துவதற்கென அமெரிக்கா இலங்கைக்கு ஒரு கோடியே 65 லட்சம் அமெரிக்க டாலர்களைக் கடனுதவியாக வழங்குகிறது. தற்போதைய நாணயமாற்று விகிதப்படி இது 25,24,50,000 ரூபாவாகும்.

பிரஸ்தாப கடன்தொகைக்கான ஒப்பந்தம் இருநாடுகளினதும் அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்தாகியது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜன்ஸி மூலம் வழங்கப்படும் இந்தக் குறைந்தவட்டியிலான கடன் தொகையை 10 வருட சலுகைக் காலத்துடன் 40 வருடங்களில் திருப்பிச் செலுத்தமுடியும்.

இந்தக் கடன் தொகை உட்பட மொத்தம் 38,60,00,000 டாலர்களை இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் அமெரிக்கா கடனாக வழங்கியுள்ளது. இன்றைய நாணயமாற்று விகிதப்படி இதன் பெறுமதி ரூபா 590 கோடியாகும். (இ)

## யாழ். உதைபந்தாட்ட லீக் நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீகின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் மண்டபத்தில் திரு. எம் இஸ்ஸடீன் தலைமையில் கூடியபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டார்கள்:

தலைவர்: டாக்டர் ஜே பி. வி பிலிப்ஸ், உப-தலைவர்கள்: திருவாளர்கள் ஈ, கே. குமரையா, ஏ யோண், எஸ். சிவகுரு, எம் அருளம்பலம், ஜனுப் எம் இஸ்ஸடீன். செயலாளர்: திரு ஏ. தேவராசா, உப செயலாளர்: திரு எஸ். தாஸீஸியஸ், பொருளாளர் திரு ஏ. பிரான்ஸிஸ்.

இவர்களுடன் பன்னிரண்டு நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## மேற்கிந்தியாவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

ரினிட்டாட், மார்ச் 6

ஆஸ்திரேலியாவுக்கு மேற்கிந்திய தீவுகளுக்குமிடையே போர்ட் ஒப் ஸ்பெயினில் நடைபெற்ற முதலாவது கிரிக்கட் டெஸ்டில் மேற்கிந்தியகோஷ்டி மிக இலகுவாக ஒரு இன்னிங்ஸ் 106 ஓட்டங்களால் வெற்றி பெற்றது

முதலில் துடுப்பாடிய ஆஸ்திரேலியா 90 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. அடுத்து துடுப்பாடிய மேற்கிந்தியா சகல விக்கட்டுகளையும் இழந்து 405 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அல்வின் காளிச்சரன் 127 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 209 ஓட்டங்களைப் பெற்றது (இ)

## சன்சோனிக்கமிஷன்விசாரணை

### மிகிந்தலையில் சிங்கள ஊழியர் இப்படிக் கேட்டார்:

# "சுந்தரம் எங்கே? சதையைத் தின்ன வேண்டும்!

## அப்பாவிப் பிரயாணிகளை இராணுவம் துப்பாக்கி முனையில் வதைத்தது!

### முழங்காலில் நிற்கும்படியும் வற்புறுத்தினர்"

[யாழ்ப்பாணம்]

**யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புண்டா என்று இராணுவ லெப்டினன்ட் கேட்டார். அனுராதபுரத்திலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் பாது காப்பு உண்டு என்று அவருக்குக் கூறினோம்.**

**அன்று கந்தோருக்கு வராத சிங்கள ஊழியர் ஒருவர் சாரத்துடன் வெளி யில் வந்து; 'சுந்தரம் எங்கே? அவன் சதையைத் தின்னவேண டும்!" என்று சிங்களத்தில் கூறினர்.**

*இந்தப் பயங்கரத்திலிருந்து தப்ப காடையர் தாக்குதலுக்குப் பயந்து காடுகளில் ஒழிந்து வாழ்ந்தேன்,*

*பரந்தனில் வரும்போது இராணுவத்தினர் துப்பாக்கி முனையில் லொறியொன்றில் வந்த அப்பாவிப் பிரயாணிகளை, முழங்காலில் நிற்கும்படி கூறினர்கள்".*

மிகுந்தலையைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே மகேஸ்வரன் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சிய மளிக்கையில் நேற்று மேற் கண்டவாறு கூறினர்

திரு கே. மகேஸ்வரன் மேலும் கூறியதாவது:

"எனது கந்தோர் மிகுந்தலையிலிருந்து 3 மைல் உள்ளே இருக்கிறது. நான் உத்தியோகத்தர் விடுதியில் தங்கினேன்.

### தனிச் சிங்கள ஊர்

அது ஒரு சிங்கள ஊர். தமிழர்களோ முஸ்லிம்களோ இல்லை ஆகஸ்ட் 17ம் திகதி கந்தோருக்குப் போனேன்.

என் சிரேஷ்ட அதிகாரி செல்லத்துரை லீவில் சென்றிருந்ததால் அன்று கந்தோருக்கு வரவில்லை அங்கு 9 தமிழ் உத்தியோகத்தர்கள் இருந்தனர். நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தர்களும் இருந்தனர்.

17ம் திகதி காலை இனக் கலவரம் அனுராதபுரத்தில் ஆரம்பித்துவிட்டதாக தகவல் கிடைத்தது சனங்கள் சந்திக்கு சந்தி நின்று கூடிக் கதைத்துக்கொண்டிருந்தார்கள்

அனுராதபுரத்தில் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும், கடைகள் தீ வைக்கப்பட்டதாகவும் அறிந்தோம். 11 மணிக்கு ஜீப்பில் தமிழ் உத்தியோகத்தர்களும் சிங்கள உத்தியோகத்தர்களும்போஞர்கள். அனுராதபுரத்துக்கும் மிகிந்தலைக்குமிடையில் தடை போட்டு வைக்கப்பட்டிருந்தது அதனால் ஜீப் திரும்பி வந்துவிட்டது. மிகுந்தலை சந்தியிலும் இனக்கலவரம் ஆரம்பித்துவிட்டது.

### அபாய அறிவிப்பு

11 மணிக்கு சில தொழிலாளர்கள் வந்து குடியேற்றத் திட்டத்திலுள்ள இளைஞர்கள் அந்த குழப்பம்செய்யப்போவதாக கூறினர்கள்.

அன்று கந்தோரில் வேலை செய்யும் அனுத்தனா என்பவர் வரவில்லை. அவர் சாரமும் சேட்டும் அணிந்து கந்தோருக்கு வெளியில் நின்றார் என் கந்தோர் லிகிதர். "சுந்தரம் எங்கே? என்று கேட்டார். அப்போது சுந்தரம் அங்கு இல்லை.

கமிஷனர்: அவர் எங்கே இருந்தார்? கந்தோரில் இருக்கவில்லை

செல்லத்துரையும், சுந்தரமும் தனக்குச் செய்ததற்கு அவர்களைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று கூறினார்.

அங்கிருப்பது அவர்கள் உயிருக்கு ஆபத்தென்பதை அறிந்தோம். பாதுகாப்புத் தேடினோம். நான் விடுதிக்குச் சென்றேன். தில்லைநாதனும் வந்தார். நான் பூட்டித் தயாராக நின்றேன்.

1-30 மணிக்குச் சுந்தரம் வந்து, இளைஞர்கள் அணிவகுத்து விடுதியை நோக்கி வருவதாகச் சொன்னார். குடியேற்றத் திட்ட இளைஞர்கள் கூச்சல்போட்டு வந்தனர். எதிரேயுள்ள சுந்தரம் விடுதிக்குள் கதவை உடைத்துச் சென்றனர். அந்நேரம் சுந்தரம் அங்கு இருந்தாரோ எனக்குத் தெரியாது. அதன் பின் சிலர் வேறு வழியால் சென்றனர். என் விடுதிக்கு வரவில்லை.

### காட்டுக்குள் ஓடினேன்

2 மணிக்குத் தொழிலாளி சேனநாயக்கா வந்து, எனது விடுதியை இளைஞர்கள் தாக்க வருவதாகக் கூறினர். நான் விடுதியைப் பூட்டிவிட்டு பின் பக்கத்திலிருந்த காட்டுக்கு ஓடினேன்

காட்டில் சாந்தகுமார், பாலசந்திரன் ஆகியோர் ஒழித்திருந்தனர். அவர்களுடன் 6 30 மணி வரை ஒழித்திருந்தேன.

ஒருமிக்க இருந்தால் ஆபத்தென்று நினைத்து, நான் அவர்களை விட்டுப் பிரிந்துசென்றேன். அவர்கள் அங்கிருந்தனர்.

பின்னர் காலை 5 மணிக்கு சிங்கள ஓவசியர் விடுதிக்குச் சென்றேன். இளைஞர்கள் காட்டுக்குள் தேடப்போவதாக அறிந்தேன ஓவசியர் வீட்டில் இரவு தங்கினேன் என்னை வேறிடத்திற்குப் போகச் சொன்னார்கள். பின் ஒரு மாதிரி சிங்களத் தொழில்நுட்ப உதவியாளர் வீட்டிற்குச் சென்றேன். நான் 'ஸ்டோர் கீப்பர்' ஜெயதிலகாவைச் சந்திக்கப் போனேன். ஓவசியரின் கூடாரத்திற்கு 6 மைல்களுக்கப்பால் போனோம். அங்கு 18ந் தேதி இரவு தங்கினோம்

19ந் தேதி ஒரு ஜீப் வந்தது அதில் பொலிஸார் வந்தனர் எங்களைச் சிங்கள முதலாளி அப்புகாமி வீட்டிற்குப் பாதுகாப்புக்குக் கொண்டுசென்றனர். பின் அங்கிருந்து அனுராதபுரம் கச்சேரிக்கு வந்தோம். பின் யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் வந்தோம். வரும்போது பரதண்டகாவ என்ற இடத்தில் பிக்கு ஒருவர் பஸ்ஸுக்குக் கல் வீசினர்.

பஸ்ஸைத் தொடர்ந்து தில்லைநாதன் காரில் வந்தார்? முறிகண்டியை அடைந்ததும், அப்பாடா என்று பெருமூச்சுவிட்டு தன் பஸ்ஸிலிருந்து இறங்கித் தில்லைநாதன காரில் ஏறிக் கொண்டேன். இனிப் பாதுகாப்பாகச் செல்லாமென்று நினைத்தேன்.

### இராணுவத்தினர் மறித்தனர்

பரந்தனுக்கும் ஆனையிறவுக்குமிடையில் ஒரு இராணுவ ஜீப் முன்னால் சென்றது யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு லொறி வந்துகொண்டிருந்தது இராணுவத்தினர் அந்தலொறியையும் எங்களையும் மறித்தனர்.

றைபிளைக் காட்டி லொறியிலிருந்தவர்களை இறங்கச் சொன்னார்கள். அணிவகுத்து முழங்காலில் நிற்கச் சொன்னார்கள். லொறியில் வந்த பிரயாணிகள் அப்படியே செய்தனர்.

கமிஷனர்: என்ன? -முழங்காலில் நிற்கச் சொன்னார்கள்.

கமிஷனர்: முழங்காலில் நின்றனரா:-ஆம் றைபிளைக் காட்டிப் பயமுறுத்தியதால் முழங்காலில் நின்றனர்

இராணுவ ஜீப்பிலிருந்து லெப்டினன்ட் ஒருவர் இறங்கி எங்கள் காருக்கு அருகில் வந்தார்.

லைசென்ஸ் இன்சூரன்ஸ் இல்லையா என்று கேட்டார். நாங்கள் சொன்னோம்.. அனுராதபுரத்தில் எங்கள் உடமைகள் எல்லாவற்றையும்கொள்ளையடித்துவிட்டார்களென்று எங்கே போகிறீர்கள்? என்று கேட்டார். யாழ்ப்பாணம் என்றோம். ஏன் போகிறீர்கள்! என்று கேட்டார் "வேறு வழியில்லை அகதிகளாகப் போகின்றோம்" என்றோம்

அகதிகள் பஸ்ஸின் பின்னால்

[6ம் பக்கம் பார்க்க)

## "சிகிச்சையளிக்க பொலிஸ் நிலையம்வரக்கேட்டார்"!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் திரு பெ அமரசிங்கம் சன்சோனி கமிஷன்முன் கூறியதாவது:

77ம ஆண்டு ஆகஸ்ட்மாதம் யாழ். பெரியாஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகராகக்கடமை யாற்றினேன்.

கான்ஸ்டபிள் பண்டார ஆகஸ்ட் 15ம் தேதி அதிகாலை 2-15 மணிக்கு வார்ட்டி துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் அனுமதிக்கப்பட்டார். தொடையிக்காயமிருந்தது. 15-ம் தேதிஎக்ஸ்ரே எடுக்கப்பட்டது வைத்திய நிபுணர் டாக்டர் பொன்னம்பலம் சிகிச்சையளித்தார் 15ம் தேதி தொடர்ந்து அவர் வார்ட்டில் இருந்தார்

அவர் தன் சொந்த விருப்பத்தின்பேரில் டிக்கட் வெட்டிச் சென்றார்.

நான கச்சேரியில் நடந்த இணைப்பு அதிகாரிகள் மாநாட்டுக்குச் சென்றேன். அப்போது டி. ஐ. ஜி -அனே செனிவரத்தின வரவில்லை நம்பர் அணியாத பொலிசார் ஆஸ்பத்திரிக்குள் வந்தனர்.

கமிஷனர்: 16ம் தேதி? - ஆம்-

சிகிச்சை சரியில்லை என்பதற்காக கான்ஸ்டபிள் பண்டார ஆஸ்பத்திரியை விட்டுச் செல்லவில்லை. அப்படிச் சென்றிருந்தால் அதனை எழுதியிருக்கலாம்.

### லியனகே கேட்டார்

16ம்தேதி இரவு ஏ எஸ். பி. லியனகே போன் செய்து பண்டாரவுக்கும் பொலிஸ் நிலையத்திற்கு வந்து டாக்டர்களைச் சிகிச்சையளிக்குமாறு என்னிடம் கேட்டார்.

பொலிஸ் நிலையத்திற்கு நாங்கள் டாக்டர்களை அனுப்ப மாட்டோம். தேவையானல் அவரை இங்கு அனுப்பினல் தேவையான சிகிச்சையளிப்போம் என அவரிடம் கூறினேன். அவர் பின் வரவில்லை. டாக்டரின் அனுமதியில்லாமல் பண்டார சொந்த விருப்பப்படியே சென்றார்.

டாக்டர் நவரத்தினசிங்கத்திற்கு வெளியிலிருந்து ஒரு டெலிபோன்கோல் வந்தது. சுகாதாரசேவை அத்தியட்சகர் எங்கே அவரைச் சுட்டுத்தள்ளுவோம் என்று அவருக்குச் சொல்லுங்கள் என்று அந்தத் தகவல் இருந்தது

சட்: இச்செய்தி பொலிசாரிடமிருந்து வந்திருக்கலாம் என்று யாரும் சொன்னார்களா? ஞாபகமில்லை. சுகாதார சேவை அத்தியட்சகர் திரு. தசநாயக்கா, 18ம்தேதி இங்கிருந்து சென்றுவிட்டார்.

ஆஸ்பத்திரியில் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டனர், அவர்களில் மூவர் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களைச் சுமார் 15 பொலிசார் காவல் செய்ததுடன் சவச்சாலைத் தொழிலாளரையும் பொலிசார் தாக்கினர்கள்.

### போக மறுத்த தாதியைத் தேடிச் சென்றனர்

பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த சிங்கள நர்ஸ் ஒருவர் யாழ்ப்பாணத்தை விட்டு, தென்னிலங்கை போக மறுத்துவிட்டார். இவரைத் தேடிப் பொலிசார் அடிக்கடி ஆஸ்பத்திரி தாதிகள் விடுதிக்குச் சென்று தொந்தரவு செய்தனர் இதுபற்றி எனக்குத்தாதிகள் புகார் செய்தனர். இந்த சிங்கள நர்ஸ், டாக்டர் ஒருவரின் வீட்டில் பாதுகாப்பாக இருந்தார்.

கான்ஸ்டபிள் பண்டாரவுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

---

### வட இலங்கை...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

சாமி பாட்டு, சாந்தினி மாலா மார்க்கண்டு, பாட்டு, வாசுகி துரைசிங்கம் பாட்டு, ஜெயந்தா ஜெதீசன் வீணை, அமிர்தவர்ஷினி பாலசிங்கம் பாட்டு கலயாணி பாலசிங்கம் வீணை. சிவகலாபாமினி வைத்திலிங்கம் வீணை, ஆறுக விஜயரட்ன வீணை. தயாபரி செந்தில்நாதன் பாட்டு, கீத்தா தில்லைராஜா வீணை, ஜெயகௌரி நன்னித்தம்பி பாட்டு, சுகந்தி நாகராஜா பாட்டு. தனேஸ்வரி நடராஜா பாட்டு. சகிலா நவரட்னம் பாட்டு, ஸ்ரெலா சந்திரகுதனி பாட்டு, சயனி இராஜசிங்கம் பாட்டு, பிரகலாபன நாகரெத்தினம் புல்லாங்குழல், தனலக்ஷ்மி குரியிநாதன வயலின், சுகந்தினி பாலசிங்கம் பாட்டு, பாலநாயகி பாலசுப்பிரமணியம் பாட்டு.யசோதா தியாகராஜா பாட்டு. செல்வி ம ப ற தங்கராஜா வீணை, ஷெறீன் சுபோனி சபாநாதன் வீணை இத்திரா சிவலிங்கம் வீணை, மேலா நல்லலிங்கம் பாட்டு காஞ்சனா இராமச்சந்திர சர்மா பாட்டு, அனுதிகா கந்தசாமநாதன பாட்டு இராஞ்சன் சுப்பிரமணியம் புல்லாங்குழல், சிவகுமாரி ஜனகரெத்தினம் பாட்டு, டீபகுமாரி தில்லைநாத வீணை, பகவன் முருகேசபிள்ளை பாட்டு

(தொடரும்)

### ஸ்ரீசத்யசாயிசேவா சமிதி சிவராத்திரி விழா

[யாழ்ப்பாணம்]

யாழ் மத்திய பகவான் ஸ்ரீசத்யசாயிசேவாசமிதி ஆதரவில் இன்று யாழ்ப்பாணம் ரசிகரஞ்சனசபா மண்டபத்தில் இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை நடைபெறும் மகாசிவராத்திரி விழா நிகழ்ச்சிகளின்போது, பஜனை, சொற்பொழிவுகள், லிங்காபிஷேகம், நகரபஜனை, அதிகாலை பூஜை ஆகியன இடம்பெறும்.

0 0 0

### திருப்புகழ்மன்ற சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருப்புகழ் மாமன்றத்தின் சிவராத்திரி விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறுப விழாவில் பண்ணிசைக்கச்சேரி சிறுவர் சிறுமியர் சங்கப்பாட்டுகள், இசை நிகழ்ச்சிகள் சொற்பொழிவுகள் இரவு முழுவதும் இடம்பெறும். [கை]

0 0 0

### யாழ். வளாக சிவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்

யாழ் வளாக இந்துமன்றத்தின் ஆதரவில் இன்று வளாகத்திலுள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் சிவராத்திரி விழா இடம்பெறுகிறது.. இதனை யொட்டி கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (கி)

0 0 0

### வட்டுக்கோட்டையில்

வட்டுக்கோட்டை மூன்றாம்பனை வயிரவர் கோவில் மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு இன்று விசேஷ அபிஷேகம், நான்கு ஜாமப் பூஜை திருமுறைக் கச்சேரி சங்கீதக் கச்சேரிகளும் நடைபெறும் திரு. கா. திருநாவுக்கரசு எம். பி. தலைமை வகிப்பார்

---

### வண்ணை சிவன் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை சிவன் கோவில் திருவிழாக்கள் கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது 2 ஆம் திருவிழாவாகிய இன்று பகல் திருவிழா காலை 9 மணிக்கும், இரவு திருவிழா மாலை 6-30 மணிக்கும் விநாயகப்பெருமான் மூஷிக வாகனத்தில் உலாவருதலும் நிகழவுள்ளது. அத்துடன் சிவராத்திரி பூஜைகள் முறையே இரவு 10மணி நள்ளிரவு 12மணி காலை 2 மணி, காலை 4 மணி ஆகிய நேரங்களில் இடம்பெறவுள்ளது [ஜ]

### "சிவகுமாரன் சிலையை உடைக்கவேண்டும் என்று இராணுவத்தினர் சிங்களத்தில் பேசினார்கள்!

# அடுத்த நாள் சிவகுமாரன் சிலை தலைகீழாக இருந்தது!

## வீட்டுக்கு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியில் இழுத்துவிட்டு உள்ளேயிருந்த இரு சைக்கிளையும் வெளியில் எடுத்தார்கள். பின் வீட்டுக்கு தீ மூட்டினார்கள்.

"ஏன் நெருப்பு வைத்தீர்கள்?" என்று கேட்டதற்கு வீடு எரியட்டும் நீ வா" என்று இழுத்துச் சென்றார்கள் தூரத்தில் நின்ற ஜீப்பில் என்னையும் மகனையும் கட்டாயப்படுத்தி ஏற்றினார்கள். பலாத்காரமாகவே ஜீப்பில் ஏற்றினார்கள்.

ஒரு பாடசாலைக்கு கொண்டு போனார்கள் அங்கு அரைமணி நேரம் வைத்திருந்தார்கள்.

[மிகுதி நாளை வரும்]

## கடைக்காரர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"சிவகுமாரன் என்னைப் படிப்பித்த மாஸ்டரின் மகன் என்று தெரியும். அவர் பொலிஸ் பாதுகாப்பில் இருந்தபோது இறந்தார்." உரும்பராயைச் சேர்ந்த வர்த்தகர் முத்துத்தப்பி புண்ணியமூர்த்தி சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

புண்ணியமூர்த்தி மேலும் கூறியதாவது!

"ஆகஸ்ட் 19ந் தேதி காலை 11 மணிக்கு நான் என் கடையில் இருந்தேன். என் கடைக்கு எதிரில் சிவகுமாரன் சிலை இருக்கிறது. 10 மணிக்கும் 12 மணிக்குமிடையில் அவ்விடத்தில் மக்கள் கூடிநின்றார்கள். அப்போது 4 இராணுவ ஜீப்பும் 2 கவச மோட்டாரும் வந்து அவ்விடத்தில் நின்றன. அவர்கள் இறங்கி மக்களை விரட்டி அடித்தார்கள். எல்லோரும் ஓடிவிட்டனர் கடையைப் பூட்டடா என்றார்கள். மற்றக் கடையை அடித்தார்கள்.

1958ம் ஆண்டுக் கலவரத்தில் அடிபட்ட அனுபவம் எனக்கு இருந்தது. அதனால் சடாரென கடையைப் பூட்டிவிட்டேன்.

சிவகுமாரன் சிலை முன் நின்று இராணுவத்தினர் சிங்களத்தில் கதைத்தனர். சிலையை உடைக்கவேண்டுமெனப் பேசிக்கொண்டனர். மறுநாள் வந்தேன். கடை,

### சன்சோனி கமிஷன் விசாரணை

கொள்ளையடிக்கப்பட்டிருந்தது 21ந் தேதி முழு நாள் ஊரடங்குச் சட்டம் 22ந் தேதி மார்க்கட்டுக்கு வந்தபோது சிவகுமாரன் சிலை தலைகீழாக இருந்தது!

சட் பார்லட்! சிவகுமாரனை பொலிசார் பல தடவை அடித்து உதைத்தனர்?-ஆம்.

சட்! பொலிஸ் பாதுகாப்பில் அவர் உயிர் பிரிந்தது?-ஆம். அடிபட்டு இறந்ததாகத் தெரியும்.

பருத்தித்துறை இளைப்பாறிய வங்கி மனேஜர் வே. சி. சுந்தப்பு சாட்சியமளிக்கையில், ஆகஸ்ட் 13ந் தேதி குண்டசாலையில் வீட்டைப் பூட்டிவிட்டு வந்ததாகவும் தன் வீடு கொள்ளை அடிக்கப்பட்டதாக அறிந்ததாகவும் கூறினர்.

## சுதந்திரம் எங்கே?—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்ததாகவும் முருகண்டியிலிருந்து தனியாக வருவதாகவும் கூறினர்.

### யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு உண்டா என்று கேட்டனர்

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு இருக்குமா என்று அவர் கேட்டார்.

அனுராதபுரத்திலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு உண்டு என்று கூறினேன்.

இராணுவத்தினர் றைபிளைக் காட்டிக்கொண்டிருந்தனர். தில்லைநாதனை நோக்கி றைபிளைப் பிடித்தனர்.

அந்த லெப்டினன்ட், இராணுவத்தில் ஒரு தொழில் நுட்ப அதிகாரிபோல் தெரிந்தது. பின்னர் எங்களைச் செல்லவிட்டார்கள். லொறியில் வந்த பிரயாணிகளுக்கு என்ன நடந்ததென்று தெரியாது.

சட்டத்தரணி கோடீஸ்வரன்: எப்போது கலவரம் நடந்தது? 17-ந் திகதி.

சட்: எப்போது திரும்பிப் போனீர்கள்? செப்டம்பர் 22-ந் திகதி. என் வீடு முற்றாக சேதமடைந்திருந்தது. சாரதி அமரசேன, எனது பொருட்களில் சிலவற்றைத் தான் மணல்களுக்கு அப்பால் பாதுகாப்பாக வைத்திருப்பதாகக் கூறினர். ஏன் அங்கு வைக்கவில்லையென்று நான் கேட்டபோது அது ஆபத்து என்று கூறினர். பொருட்களை எடுத்துவர வாகனம் இடைக்கவில்லை. நான் பொருட்களை வைத்திருப்பதால் கொள்ளைப் பொருட்களைத் தேடித் திரியும் பொலிசார் சந்தேகப்படுவார்களென்றும், ஆதலால் ஒரு கடிதம் தருமாறும் அவர் என்னிடம் கேட்டார்.

### உதவ வந்து கொள்ளை அடித்தனர்

17-ந் திகதி எனக்கு உதவி செய்ய வந்தவர்கள் பின் என் பொருட்களைக் கொள்ளையடித்துவிட்டார்களென்று அறிந்தேன்.

சில பொருட்கள் பற்றி பிரச்னையிருந்ததால் அவை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன என் பொருட்களை மீட்கப் பொலிசார் உதவியளிக்க முன்வரவில்லையாகை எனது சொந்த முயற்சியால்பொருட்களை கண்டுபிடித்தேன். 30,000 ரூபா எனக்கு நஷ்டம். அதில் 5000 ரூபா பெறுமதியான பொருட்களை மீட்டுவிட்டேன். 14 வருடம் சேவையாற்றிவிட்டேன். எனக்கு சம்பளம் 450 ரூபா.

சட்: முழங்காலில் எத்தனை நிமிடம் இராணுவத்தினர் இருக்கச் சொன்னார்கள்? 10 நிமிடமிருக்கும்

சட். கைகளையும் உயர்த்தச் சொன்னார்கள்? ஆம்.

சட்: வயோதிபர்களும் இருந்தார்கள்? ஆம், பெண்கள் இல்லை

சட்: முழங்காலில் கையை உயர்த்தியபடி இருந்தார்கள்? ஆம்.

சட்டத்தரணி பாலசுப்பிரமணியம்: மீண்டும் அங்கு செல்வது பாதுகாப்பில்லை? ஆம்

## பழிவாங்க வேண்டும்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வீட்டுக் குளியலறையில் மனைவியும் நானும் ஒழிந்துகொண்டோம்.

குண்டர்கள் முன் கதவை உடைத்தார்கள். என் மனைவியையும் என்னையும் தேடினார்கள். பின் குளியலறையையும் உடைத்து எங்களை வெளியில் இழுத்து அடித்தார்கள்.

"பாம் தொழிலாளி வில்லியமும் அக்குண்டர்களுடன் வந்தார் அவர்தான் அங்கு தொழிற்சங்கத் தலைவராக இருந்தார். எங்களுக்கு உதவி செய்த சிங்கள நண்பர்களான ஜெயசூரியா, தர்மதாசாவையும் குண்டர்கள் அடித்தார்கள்.

### என் மனைவி கதறக் கதறத் தாக்கினான்!

"குண்டன் ஒருவன் என் மனைவியை கதறக்கதற இழுத்துச்சென்று நிலத்தில் தலைகுப்புற மோதவிட்டான். இதனால் மனைவிக்கு பலத்த அடிபட்டு பின் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றார்.

வீட்டில் கொள்ளையடித்த பொருட்களை கொண்டுசெல்ல முயன்றனர் அவர்கள் கண் கார் கரூச் மீது பட்டது, உடனே கராஜுக்குச் சென்று கரூச்சை உடைத்து காரை வெளியில் எடுத்துவந்து ஓட்டிச் சென்றனர்.

'பாம்' சிற்றூழியர் காமினி என்பவர்தான் என் காரை எடுத்துச்சென்றார் என்று அறிந்துகொண்டேன். அவர் அங்கு லொறி கிளினராக வேலை பார்த்தார்.

பின் என்னுடன் வேலைசெய்யும் சிங்கள உத்தியோகத்தர்கள் எங்களை லிகிதர் ஏக்கநாயகா வீட்டிற்கு கூட்டிச் சென்றனர். என் தலைமை அதிகாரி யப்பாவும் வந்தார். அங்கிருந்து ஒரு மைல் தூரம் நடந்துசென்று ஜீப்பில் ஏறினோம் வீரக்கோன் ஜீப்பை ஓட்டிவந்தார். அன்றிரவு அங்கு படுத்தோம். லிகிதர் ஏக்கநாயகா வீடும் தாக்கப்படலாம் என்று அஞ்சினோம். ஏனெனில் மற்றும் தமிழ் உத்தியோகத்தர்களும் அந்த வீட்டில் தஞ்சமடைந்திருந்தனர். பின்னர் திரு அதிகாரி வீட்டிற்கு கூட்டிச் சென்றனர், 18ம் திகதி அங்கு போனோம் 19ம் திகதி காலை கெக்கிராவ பொலிஸ்நிலையத்துக்கு ஜீப்பில் வந்தோம், காலை 4 மணிக்கு பொலிஸ்நிலையத்திற்கு வந்தோம். கெக்கிராவையில் இருந்து பொலிஸ் பாதுகாப்புடன் லொறியில் வந்தோம். அனுராதபுரம் கச்சேரியில் தங்கினோம்.

## குடிக்க தண்ணீர் இல்லை; குழந்தைகள் துடித்தன!

"அனுராதபுரம் கச்சேரியில் 2000 அகதிகள் இருந்தனர் குடிக்க தண்ணீரில்லாமல குழந்தைகள் கதறின மறுநாள் முற்றாக தண்ணீர் இல்லை

'பஸ்ஸில் அனுராதபுரத்திலிருந்து வவனியா வந்தோம் வழியில் பஸ்ஸுக்குக் கல் எறிந்தார்கள், வழியில் ஒரு பௌத்தபிக்கு அகதிகள் பஸ்ஸைக் கண்டதும் ரோட்டில் குனிந்து கல்லெடுத்தார் அப்போது அவர் தோளிலிருந்த போர்வை விழுந்துவிட்டது அவர் அப்போர்வையை எடுத்து தோளில் போட்டபடியே பஸ்ஸுக்குக் கல்லால் எறிந்தார்

கமிஷனர்: என்ன? பிக்குவின் போர்வை விழுந்துவிட்டது, அவர் அதை எடுத்துத் தோளில் போட்டபடி அகதிகள் பஸ்ஸுக்குக் கல் வீசினார்

சட்டத்தரணி பார்லட்: எவ்வளவு நஷ்டம்? 30,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது கார்ச்சேதம் 5000

சட்: இனிமேல் அங்கு வேலை செய்ய முடியாது? ஆம்

சட்: தாக்கியவர் ஒருவர் தொழிற்சங்கத் தலைவர்? ஆம்

சட: பெயர் என்ன? வில்லியம்

சட்டத்தரணி ஆர் பசலகப் பிரமணியம்: உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தீரா? மகஜர் மூலம் அறிவித்தேன்

சட: எதற்காக காரை எடுத்தார்கள்? கொள்ளையடித்தப் பொருட்களைக் கொண்டுசெல்ல!

## முழங்காவில் இன்று ஆரம்பம்

(வண்ணார்பண்ணை)

முழங்காவில் இளைஞர் விவசாயத்திட்டத்தில் குழாய்க் கிணறுகள் தோண்டும் வேலைகள் இன்று ஆரம்பிக்கவிருக்கின்றன. சம்பந்தப்பட்ட நிலநீர் ஆராய்ச்சி பொறியியலாளர்கள் முழங்காவிலில் முகாமிட்டு வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஏ ஏ ஜோசேப் இத்தகவலைத் தெரிவித்தார்.

## ஜனதா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களைப் பிடித்துள்ளது. அருணாசலல் பிரதேச மக்கள் கட்சி 17 இடங்களையும் சுயேச்சையாகப் போட்டியிட்டவர்கள் 05 இடங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

ஆந்திரப்பிரதேசத்தில் டாக்டர் ஷன்னரெட்டி முதலமைச்சராப் பதவியேற்றுள்ளார்.

## குண்டர்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அங்கு 15 தமிழ்க் குடும்பங்களும் 4 சிங்களக் குடும்பங்களும் வாழ்ந்து வந்தன

ஆகஸ்ட் 17ஆம் திகதி காலை 10 மணிக்கு வெளியேயிருந்து வந்த குண்டர்கள் தடிகளுடன் எங்களைத் தாக்கத் தொடங்கினார்கள்

பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள் நன்கு பக்கமும் சிதறி ஓடினார்கள் சிலர் ஆற்றுக்குள் பாய்ந்து தப்பினார்கள் நான் காட்டுக்குள் ஓடினேன்.

நான் வீட்டிலிருந்தபோது சிறுவன் ஒருவன் வந்து 'அடிக்க வருகிறார்கள் ஓடுவோம்" என்றேன் 'ஓடாதீர்கள் ஓடினால் அடி விழும்' என்று குண்டர்கள் சிங்களத்தில் கூறிக்கொண்டு வந்தார்கள்

நான் மூலைக்குப் பின் வேலியால் பாய்ந்து ஓடினேன் இராமசாமியும் ஓடினார் அவருக்கு அடி விழுந்தது பெண்கள் குளறினார்கள் நான் அங்கு போக வரவேண்டாம் ஓடுங்கள் என்றார்கள் நான் தாக்கப்பட்ட சிறுவனை தூக்கிக்கொண்டு காட்டுக்குள் ஓடினேன் அங்கு ஒழித்துக்கொண்டோம் வீடெல்லாம் எரிந்து கொண்டிருந்தது அந்தச் சிறுவன் அன்றிரவு இறந்துவிட்டார்


### ஏஜண்டுகள் தேவை

"ஈழநாடு" பத்திரிகை விற்பனை சம்பந்தமாக ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் புதிய ஏஜண்டுகள் தேவை உடன தொடர்புகொள்ளவும்.

நிர்வாகி
'ஈழநாடு'
யாழ்ப்பாணம்



### தேவை

நெசவு வேலையில் நன்கு அனுபவமுள்ளவர்களும், நெசவு வேலை பழகவிரும்பும் பெண் பிள்ளைகளும் தேவை. தகுதிக்கேற்ற சம்பளமும், தங்கும் வசதிகளுமுண்டு விண்ணப்பிக்கவும். அருணகிரி இன்டஸ்திஸ் 42 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 8642


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தி மேல வீதி 68 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka